THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think the figures are high compared to figures for previous years. I may tell the hon. Member that for the 108 in Ambur cases, the amount involved is only Rs. 7,898, for as many as 174 cases in Vaniyambadi, the amount involved is only Rs. 9,651 and for the 45 cases in Pernambut, the amount involved is proportionately high, namely, Rs. 6,000 and odd.

SRI A. A. RASHEED : Is the hon. Minister aware of the fact that three months back people were afraid to come out of their houses in Ambur and Vaniyambadi as the number of thefts were numerous?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no such information with me, Sir.

SRI S. PAKKIRISAMI PILLAI : இம்மாதிரியான திருட்டு விஷயங்களை கண்டு பிடிப்பதில் போலீஸார் இப்பொழுது திறமைக் குறைவாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா? அப்படியானால் அவர்கள் அதிக கவனம் செலுத்தி, திருட்டுக் குற்றங்களை உடனுக்குடன் கண்டுபிடிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திருட்டுக் குற்றங்களை கண்டு பிடுப்பதிலோ அல்லது மற்ற குற்றங்களை கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதிலோ போலீஸார் திறமைக் குறைவாக இருக்கிறார்கள் என்று சொல்லுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. எந்த நாட்டிலும் குற்றங்கள் நடந்துகொண்டு தான் இருக்கின்றன. அவைகளை போலீஸ்காரர்கள் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள்.

SRI S. LAZAR : ஆம்பூர், வாணியம்பாடியில் இந்த அளவு அதிகப்படியான திருட்டுகள் நடப்பதற்கு ஏதாவது குறிப்பிட்ட காரணம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மற்ற ஸ்தலங்களோடு ஒப்பிட்டு, ஆம்பூர், வாணியம்பாடியில் அதிகமாக திருட்டுகள் நடக்கின்றன என்று நான் சொல்லுவதற்கு இல்லை.

Spurious drugs

* 39 *Q.*—SRI G. VAGHEESAM PILLAI (on behalf of SRI A. VEDARATHNAM) : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா :—

(அ) இம்மாநிலத்தில் போலி மருந்து உற்பத்தியையும், அவற்றின் விளம்பரங்களையும் விற்பனையையும் தடுக்க அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அப்படியானால் அதன் விபரம் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Necessary action is taken under the provisions of the Drugs Act, 1940, the Drugs and Magic Remedies (Objectionable Advertisements) Act, 1954, and the rules made thereunder, whenever cases of sale and advertisement of spurious drugs come to notice.

21st April 1959]

SRI K. VINAYAKAM : ஸார், அடிக்கடி பத்திரிகைகளில் சிட்டுக் குருவி லேகியம், தாதுபுஷ்டி லேகியம், என்றெல்லாம் பல புதிய மருந்துகளின் விளம்பரங்களைபோட்டு வருகிறுர்கள். இதை வாங்கு வதற்காக பல முயற்சிகளும் நடைபெற்று வருகிறது. இதை தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு முன்னல் வழி ஒன்றும் இல்லாமல் இருந்தது. இப்போது அதாவது ட்ரக்ஸ் அண்ட் மாஜிக் ரெமிடீஸ், 1954 ஆக்ட்படி தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : Is there any proposal to ban the sale and advertisement of talisman and magic rings which are supposed to cure all diseases?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதுவும் இந்த சட்டத் தின் கீழ் வரும்.

Automatic looms

* 40 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI A. VEDARATHNAM) : கனம் கைத்தொழில்அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இந்திய சர்க்கார் புதிதாக அனுமதிக்க இருக்கும் 7,500 ஆட்டோமேடிக் தறிகளில் நம் மாநிலத்திற்கு எத்தனை ஆட்டோமேடிக் தறிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன ?

(ஆ) இவற்றை எப்படி இம்மாநிலத்தில் விநியோகம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, State-wise allocation of automatic looms has been made.

(*b*) The mills which want to install automatic looms have to apply to the Textile Commissioner, Bombay, and the allotment will be made by a Committee appointed by the Government of India. The State Government come into the picture only when the remarks of the Government are called for on the applications.

SRI K. SATTANATHA KARAYALAR : நமது மாகாணத்திற்கு ஏதாவது ஆட்டோமேட்டிக் லூம்ஸ் வேண்டுமென்று மத்திய சர்க்காரிடத்தில் கேட்டிருக்கிரேமா ? வேண்டும் என்று கேட்டிருந் தால் இதுவரை எத்தனை ஆட்டோமேட்டிக் லூம்கள் ஒதுக்கப் பட்டிருக்கின்றன ? இவ்விதம் எத்தனை ஸ்டேட்டுகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது ஸ்டேட்வாரியாக கொடுக்கப்படுவதில்லை. ஆட்டோமேட்டிக் லூம்கள் வேண்டு மென்று அப்ளிக்கேஷன் போட்டால் அதற்கு தகுந்தவாறு பரிசிலனை செய்து கொடுப்பார்கள். ஆகவே, நாம் இதற்கு என்று தனியாக கேட்பது என்ற பிரச்னையே வருவதில்லை.